பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா ஹிர்ரஹீம்.

இஃது

சுத்தப்பதிப்பு

# தொழுகையடவு.

காயற்பட்டணம்

அஹ்மது நயினா லெப்பையவர்கள் குமாரர்

சதக்கத்துல்லா அவர்களால்

முன்னர் அச்சிற்பதிப்பித்த பிரதிக்கிணங்க,

28 NOV

மேலப்பாளையம்

காளை ஹஸனலிப்புலவரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

சென்னை திருவல்லிக்கேணி,

மொ. அ. ஷாஹுல் ஹமீது லெப்பை

அவர்களால் தமது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1922. [அணா 2.

Q7:414
N22
184390

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

இஃது

சுத்தப்பதிப்பு

# தொழுகையட்டவு.

## அவ்வல் கலிமா தையிபு.

லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி.

## இரண்டாங் கலிமா ஷஹாதத்து.

அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு.

## மூன்ருங் கலிமா தம்ஜீது.

சுபுஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலாஹெளல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்.

## நாலாங் கலிமா தெளஹீது.

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு லஹுல் முல்கு வலஹுல்ஹம்து யுஹ்யீ வயுமீது வஹுவ ஹய்யுன் தாயிமுன் காயிமுன் காதிருன் லாயனுமு வலாயமூத்து அபதன் அபதா துல்ஜலாலிவல் இக்ரும் பியதிஹில் கைறு வஹுவ அலா குல்லி ஷையின் கதீறு.

## ஐந்தாங் கலிமா றத்துல் குபுர்.

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக்க மின்அன் உஷ்ரிக்க பிக்க ஷைஅன் வஅன அஃலமுபிஹி வஅஸ்தக்பிறுக்க லிமாலா அஃலமு இன்னக்க அந்த அல்லாமுல் குயூபு, துப்து அன்ஹுவ தபர்ரஃத்து அன்குல்லி தீனின் சிவா, தீனின் இஸ்லாமி வஆமன்து வஅஸ்லம்த்து வஅகூலு லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி.

## இஸ்லாத்தினியல்பு

புனியல் இஸ்லாமு அலா கம்சின் ஷஹாதத்து அன்லாயி லாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹி வயி காமிஸ்ஸலாத்தி வயீத்தாயிஸ் ஸகாத்தி வஸௌமிறமலான வஹஜ் ஜில் பைத்தி மனிஸ்த்ததாஅ இலைஹிஸபீலா.

## இதன்பொருள்.

இசுலாம்மார்க்கம் ஐந்து காரியங்கொண் டெடுக்கப் பட்டது. அதில் 1-வது (கலிமா ஷஹாதத்து) அதாவதுநான் சாட்சிசொல் லுகிறேன். அல்லாவையல்லாமல் வேறே நாயனில்லை யென்றும், முஹம்மதாகிறவர்கள் அல்லாவுடைய ரசூலென்று உண்மையென உள்ளத்தில் கருதி வாயினால் கலிமாவைப் பக்குவ வயதின் பின்னர் ஒரு விடுத்தமேனு மொழியவேண்டுமென்றது.

(வயீக்காமுஸ் ஸலாத்தி) 2-வது தொழுகை. அதாவது கலி மாவை மொழிந்து இசுலாமிற் புகுந்த ஒருவன் மற்ற நான்கு வினை களுமவனே எடுத்துச் செய்வதற்கு உரித்தென்று வேத விதிப் படியே அந்நான்கில் முதற் பறுலாகிய தவத்தியல்பெனுந் தொழு கையை இரவாலும் பகலாலும் நாளொன்றுக்கு ஐந்து வக்த்து பதி னேழு றக்ஆத்து எக்காலமுந் தொழுதுக்கொள்ள வேண்டுமெ ன்றது.

(வஈத்தாயிஸ் ஸக்காத்தி) 3-வது சக்காத்து. அதாவது இஸ் லாத்துக்குரிய வொருவன் தன்னிடத்தில் பொன், வெள்ளி, ஒட் டகம், மாடு, ஆடு, தானியங்கள், திருகைகனி, ஈத்தங்கனி ஆக இவ் வெட்டு முண்டாயிருக்குமேயானல் சக்காத்துக் கொடுக்க வேண்டு மென்று வேதவிதியாயிற்று என்றமையால், பொன் னிருபது கள ஞ்சியிருந்தால் அரைக்களஞ்சியும் வெள்ளி யிருநூறு திருகமிருந் தால் ஐந்து திருகமும், ஒட்டகை ஐந்திருந்தால் ஒரு வயதுப்பருவ த்தையுடைய ஓரு செம்மரி குட்டியும், 30-மாடுயிருந்தால் ஒருவய துள்ள ஒரு காளைகன்றும், 40-ஆடுயிருந்தால் ஒருவயதுள்ள செம் மரி குட்டியும், தானியங்கள் திருகைகனி, ஈத்தங்கனி, ஐந்து கோ ட்டையிருந்தால் அரைக் கோட்டையும் ஆக இவ்விதமாக வருஷத் துக்கொருமுறை சக்காத்துக்கொடுத்துவிடவேண்டுமென்றது. இத் துகைக்குக் குறைந்திடிற் கொடுத்திட வாஜிபாகாதென்று கொள்க.

(வஸௌமு ரமலான்) 4-வது நோன்பு. அதாவது இஸ்லாமியல்பையுடையான் வருடந்தோறும் வரும்றமலான்மாதம் நோன்பு நோற்கவெனவே வேதவிதியாயிற்று. ஆகையால் நசலாளியுந் தாகத்தில்லாதவனும், யாத்திரைபோவானும் அந்தநோன்பைநோக்கு விதியாகாதென்றமையால் பருலுக்குரிய நாளன்றித் தனக்கு நஸலற்று தாக்கத்துற்று நடையொழிந்துஅவதிநீங்கியப் பாலியருக்கு ஒப்பிய கடனைப்போல் அந்நோன்பை கலாச்செய்யீ வேண்டுமென்றது.

(வஹஜ்ஜில் பைத்தி மனிஸ்த்ததாஅ இலைஹி சபீலா) 5-வது ஹஜ்ஜு. அதாவதுஇஸ்லாம்மார்க்கம்புகுந்த ஒருமுஸ்லிமானவன் தனக்குரிய தகுதியாகிய முதலும், சரீரபலனும், எறிப்போக வாகனமுமுண்டாய் வழியிற் பயமுமில்லாமையா லிருக்குமேனும் வேத விதிப்படியே ஒரு விடுத்தமேனு மக்கத்திற்போய் ஹஜ்ஜுசெய்து முடித்திடவேண்டுமென்றது. இவ்வைந்து பர்லுமெடுத்தல் பெண்பாலுக்கு முரியதாயிற்று.

இப்பறுலுகளன்றி இதனோடொத்துச் செய்யும் நல்வினைகளெல்லாம் சுன்னத்தென்றாயிற்று. ஆகையால் ஆண் பெண்ணென்னும் இருவகை ஜாதியாரும் முன்னர் கலிமாவை நினைவால் நினைந்து வாயினால் மொழியவில்லையே யவர் இஸ்லாத்துக் குரியவரல்லவராகையால் மற்ற பறுலாகிய நான்கு வினைகள் செய்திடினும் பலித்திடாதென்றவாறு.

## ஈமான் நிலை

ஆமன்துபில்லாஹி வமலாயிகத்திஹி வகுதுபிஹிவறுசுலிஹி வல்யௌமில் ஆகிரி வல்கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா.

(இதன்பொருள்) ஈமான் ஆறுகாரியங்கொண்டு நிலைப்பட்டது.

அதில் 1-வது (ஆமன்து பில்லாஹி) அல்லாஹு தஆலா ஒருவன் உண்டென்றது. அதாவது இணையில்லாதவ னென்றும், எப்பொழுதும் உள்ளவனென்றும் கருதிய கருத்தில் வஸ்துக்களும் ஒன்றுதானென்றால் அந்த வஸ்துக்கள் ஒன்றிலிருந்து ஒன்றுண்டாய், இணையுந்துணையுமாய்ப் பிறப்பு மிறப்புமாய் உண்டான அப்

படி ஒவ்வொன்றேயாயிற்று. இவ்வியல்புகளன்றியே எல்லாவஸ்து வினும்பரவித்தோன்றிடாப்பொருளாய்நின்ற அல்லாஹுதஆலா ஒருவனே உண்டென்று நினைத்து நிர்ணயம்பற்றி இருதயத்தில் ஈமான் கொள்ளுகிறது.

2-வது (வமலாயிகத்திஹி) மலக்குகள் உண்டென்றது. அதாவது மலக்குகள் அல்லாஹுதஆலா வுடைய படைப்புகளுமாய், அவன் அடியார்களுமாய், அவன் ஏவற்பணிவிடை செய்கிறவர்களுமாய், ஆண்பெண் அல்லாதவர்களுமாய், ஊனுறக்கமில்லாதவர்களுமாய் உண்டென்றறிந்து ஈமான் கொள்ளுகிறது.

3-வது (வகுத்பிஹி) சுஹ்புகளும் வேதங்களு மிறங்கினதுண்டென்றது. அதாவது அல்லாஹுதஆலா தன்னுடைய சிபத்தை வெளிப்படுத்துகிறதற்கு நபிமார்களை உண்டாக்கி அவர்களுக்கு வஹிகொண்டு இறக்குவித்த அவனது திருவசனமாகிய (நூறு) சுஹ்பும், நாலுவேதமும்என்றதில் ஆதம்நபிக்குசுஹ்பு 10-ம்ஷீஷு நபிக்கு சுஹ்பு 50-ம், இதுரீசுநபிக்கு சுஹ்பு 30-ம், இபுறுஹீம் நபிக்கு சுஹ்பு 10-ம், மூசாநபிக்கு தௌறுத்துவேதமும், தாவூது நபிக்கு சபூறு வேதமும், ஈசாநபிக்கு இஞ்சில் வேதமும், முஹம்மது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்கு புறுகான் வேதமும் கொடுக்கப்பட்டதென்றறிந்து ஈமான் கொள்கிறது.

4-வது (வருசுலிஹி) றசூல்மார்களுண்டென்றது. அதாவது அல்லாஹுதஆலா அவன் தன்னையறிந்து வணங்குகிறதற்கு வேண்டி இப்புவியினிடத்திற் பிறப்பித்த லட்சத்திருபத்து நாலாயிரம்நபிமார்களில் தாங்கள்வணங்குகிறதுமன்றி உம்மத்துகளையும் வணங்கச்சொல்லி நாயன் ஏவலால் ஏவிக்கொள்ளும்பொருட்டு நபிப்பட்டமும் றசூல் பட்டமும் கிடைத்த முந்நூற்றுப் பதிமூன்று முறுசல்கள் என்றும், இனி உம்மத்துகளை நாயன் ஏவலின்றி ஏவாமல் தாங்களே வணக்கஞ்செய்து நபிப்பட்டம் மாத்திரம் பெற்ற மற்ற நபிமார்களென்றும் அறிந்தும் ஈமான்கொள்ளுகிறது.

5-வது (வல்யவ்மில் ஆகிரி) கியாமமென்னுமோர் முடிவுநாளுண்டுமென்றது. அதாவது படையுனப்பட்ட வஸ்துக்களனைத்தும் இறந்து ஒழிந்து பதிவாகிய பின்னர் மடிந்தவர்களெல்லோர்களை அந்நாளையில் அல்லாஹுதஆலா யெழுப்பி அணியணியாய் நிறுத்

தி கேள்விக் கணக்குக்கேட்டு நன்மைசெய்த அடியார்களை சொர்க்கத்திலும், தீமைசெய்த அடியார்களை நரகத்திலும் விடப்பட்ட அந்நாளுண்டென்று உறுதித்து ஈமான் கொள்ளுகிறது.

6-வது (வல்கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா) நன்மை தின்மையென்னும் இருவகைக் கற்பனைகளுண்டென்றது. அதாவது ஆலத்தில்நடக்குஞ்செயல்கள் நன்மை, தின்மை, ஈமான், குபிர், பணிவிடை, பாவம் இதைத்தவிரஉள்ளவைகள் அடங்கலும், அல்லாவுடையகற்பனையைக்கொண்டும் கலாக்கொண்டும் அவன்நாட்டங்கொண்டுமாயிருக்கும். ஆகிலும் அடியாருக்கு அதில்இக்தியாருண்டு. ஆனபோதே அல்லாஹு தஆலா அடியானுடைய செயலைப் படைக்கிறவன் அடியான் அதைப் பரிமாறுகிறவன். ஆனதினாலே நன்மை செய்தால் சவாபும், தின்மை செய்தால் அதாபும் பெறுவானென்று ஈமான் கொள்ளுகிறது.

ஆகையால் இவ்வாறு உறுதியில் ஒன்றையேனும் சந்தேகப்படுகில் ஈமான் நிலைப்படாதென்றவாறு.

## முழுக்கின் விதிகள்.

இஸ்லாத் தியல்பையுடைய ஆண் பெண்ணென்னும் இருவகைச் சாதியாருக்கும் ஆறுவகைகொண்டு முழுக்கு விதிக்கும். அதில் ஆண் பெண் இருவருக்கும் பொதுவாக 3-பெண்பிள்ளைகளுக்குத் தனதாக 3-முழுக்காளரில் ஆண் பிள்ளைகள் செய்தற்கு ஹறாமாகுஞ் செயல் 5, பெண்பிள்ளை செய்தற்காகச் செயல்-8.

## பெருந் துடக்கு நீக்குதற்கு.

பறுலு 3, ஷறுத்து 3, சுன்னத்து 6, சிறுதுடக்குநீங்க உலூ எடுப்பதில் உள்ள சறுத்து 6, பறுலு 6, சுன்னத்து 10, உலூவினை முறிச்சலாக்கும் வகை 5, உலூவில்லார் செய்ததற்காக செயல் 3.

## தொழுகை யென்னுந் தொகை.

தொழுகைக்கு எய்துவார் முன்னர் விளங்கி அறிய வேண்டிய விதியாகிய ஷறுத்து 10, தொழுகையிற்பறுலாகிறது நினைப்பில் 1, மொழிச்சலால் 5, செயலால் 13, ஆக 19.

இப்பறுலுகளெல்லாம் முற்பட்ட ஒரு றக்ஆத்திலும், பிற்பட்ட அத்தஹிய்யாத்திலும் முடிவாயின் இது நினைப்பதிலும் மொழிச்சொற்களாலும் செயல்களாலும் முற்பட்ட றக்ஆத்திலுள்ள பறுலு 14, மொழிச்சொற்களாலும், செயல்களாலும் முற்றில்வரும் அத்தஹிய்யாத்திலுள்ள பறுலு. 5.

இனி மற்றும் றக்ஆத்துகள் ஒவ்வொன்றிற்கு முன்னர் நிய்யத்தும்.

| | |
|---|---|
| முற்பட்ட தக்பீறுமன்றி பறுலு | 12 |
| ஆகையால் சுபுஹு தொழுகை முற்றிலும் பறுலு | 31 |
| லுஹறுத்தொழுகை முற்றிலும் பறுலு | 55 |
| அஸ்றுத்தொழுகை முற்றிலும் பறுலு | 55 |
| மக்ரிபுத்தொழுகை முற்றிலும் பறுலு | 43 |
| இஷாத்தொழுகை முற்றிலும் பறுலு | 55 |

ஆக இவ்வைந்து வக்த்துத் தொழுகையில் மேற்சொல்லிய பறுலு பத்தொன்பதிலும் இசைந்த ஷறுத்துகள் 62-ம் தொழுகையில் விடப்படாத அபுஆலுசுன்னத்துகள் 6, தொழுகையிற்பொருந்தா மக்றாஹு 20, தொழுகையின் வழுவகற்றும் ஸஜ்தாசஹ்வெனும் ஏதுக்கள் 10, தொழுகையை முறிக்கும் தீராவழுக்கள் 11.

ஆகையால் தொழுகையிலுள்ள ஷறுத்துகளும், பறுலுகளும் இருவகை சுன்னத்துகளும் மற்றுமழகையுந், தொழுகையும், பிரிவும், விரிவும் எல்லாம் முன்னர் அச்சிற்பதிப்பித்து வழங்காநின்ற தக்க சுறாதென்னுஞ் சலாத்துலறுக்கான் மாலையிற் கண்டறிந்துகொள்க. இன்னமும் தொழுகையிலுள்ள மேற்பட்ட ஷறுத்து முதலான விரிவு பிரிவுகளெல்லாம் பெருநூலிற் கண்டறிந்துகொள்க.

இஸ்லாத்தியல்பையுடைய இருவகை ஜாதியாரும் முன்னர் ஜுனுபெனும் பெருந்திடக்கை நீக்கி சிறு திடக்கை நீக்குதலெனும் உலூவை நிரப்பமாக வுடுத்தபின்னர், நிலை நின்று மேல்நோக்கி இருகையேந்தி இந்த துஆவை யோதுகிறது.

## உலூவின் துஆ.

அல்லாஹும்மஜ் அல்னீ மினத் தவ்வாபீன வஜ் அல்னீ மினல் முத்ததஹ்ஹிரீன் வஜ்அல்னீ மின் இபாதி கஸ்ஸாலி

ஹீன் சுபுஹானக் கல்லாஹும்ம வபிஹம்திக்க அஷ்ஹது அன்லா யிலாஹ இல்லா அன்த அஸ்தஃபிறுக்க வஅதூபு இலைக்கவசல்லல்லாஹு அலன்னபிய்யி முஹம்மதின் வஆலிஹி வசஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

திருபாங்கிட்ட திருமொழி செவியிற் கேட்டவுடனே எப்பேச்சும் எப்பராக்கும் ஒழிந்து (மறுஹபன் பில்காயிலீன அத்லன் வமர்ஹபன் பிஸ்ஸலாத்தி அஹ்லா) என்று சொல்லி அம்மொழியையுஞ் சொல்லிக்கொள்கிறது அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வென்றபோது அதுபோற் சொல்லுகிறது, அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹி யென்றபோது அதுபோற் சொல்லிக் கொண்டு றசூலுல்லாவுடைய பேர்வரிசைக்காக (குர்ரத்து ஐனீபிக்க ஹபீபீ றசூலுல்லாஹி) யென்று இம்மொழிச்சலோடும் இருகைப்பெருவிரலையுஞ் சேர்த்துக் கண்களிலொத்தி முத்திக் கொள்ளுகிறது. (ஹைய்ய அலஸ்ஸலாஹ் ஹைய்ய அலல்பலாஹ்) என்றபோது (லாஹௌலவலாகுவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அலீம்) என்று சொல்லிக் கொள்கிறது. இனி சுபுஹுக்கு (அஸ்ஸலாத்து கைறுன் மினன்னௌம்) என்றபோது (சதக்த வபரிர்த்த வபில்ஹக்கி நதக்த) என்று சொல்லிக் கொள்ளுகிறது, பாங்குச்சொல்லில் மற்ற மொழிக்கெல்லா முஅஸ்ஸின் சொல்லுகிறதுபோல் சொல்லிக் கொள்ளுகிறது, முடிந்த பின்பு இருகையையும் எந்தி இந்த துஆவை யோதிக் கொள்ளுகிறது.

## பாங்கு இகாமத்துடைய துஆ.

அல்லாஹும்ம றப்பஹாதிஹித் தஃவத்தித்தாம்மத்தி வஸ்ஸலாத்தில் காயிமத்தி ஆத்திசெய்யிதனா முஹம்மதனில் வசீலத்த வல்பலீலத்த வத்தறஜத்தர்றபீஅத்தல் ஆலியத்தஷ் ஷரீபத்தவப் அதுஹு மகாமன் மஹ்மூதனில்லதி வஅத்தஹு வருசுக்னா ஷபாஅத்தஹு வஅவுரித்னா ஹௌலஹு யௌமல் கியாமத்தி இன்னக்கலா துகுலிபுல் மீஆது வஸல்லல்லாஹு வசல்லம அலா சைய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்.

பிறகு கிபுலாவின் திசையை முன்னோக்கி நின்று இருகைகளையும் உயர்த்தி தக்பீறு கட்டுகிறது.

## தக்பீறு கட்டுகிற மொழி.

### சுபுஹூடைய நிய்யத்து.

(சுன்னத்துக்கு) உசல்லீ சுன்னத்தஸ்ஸுபுஹி றக்அத்தைனி லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்
(பறுளுக்கு) உசல்லீ பறுலஸ்ஸுபுஹி றக்அத்தைனி அதா அன்லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்

### ளுஹறுடைய நிய்யத்து.

(சுன்னத்துக்கு) உசல்லீசுன்னத்தல்ளுஹ்றி றக்அத்தைனி லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்
(பறுளுக்கு) உசல்லீபறுலல்ளுஹறி அறுபஅ றக்ஆத்தின் அதாஅன் லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்

### அஸ்றுடைய நிய்யத்து.

(சுன்னத்துக்கு) உசல்லீ சுன்னத்தல் அஸ்ரி றக்அத்தைனி லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்
(பறுளுக்கு) உஸல்லீபறுலல் அஸ்ரி அறுபஅ றக்ஆத்தின் அதாஅன் லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்

### மக்ரிபுடைய நிய்யத்து.

(சுன்னத்துக்கு) உஸல்லீசுன்னத்தல் மக்ரிபி றக்அத்தைனி லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்
(பறுளுக்கு) உஸல்லிபறுலல் மக்ரிபிஸலாஸ றக்ஆத்தின் அதாஅன் லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்

### இஷாவுடைய நிய்யத்து.

(சுன்னத்துக்கு) உஸல்லீ சுன்னத்தல் இஷாயி றக்அத்தைனி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்
(பறுளுக்கு) உஸல்லீ பறுலல் இஷாயி அர்பஅ றக்ஆத்தின் அதாஅன் லில்லாஹிர் தஆலா அல்லாஹு அக்பர்

என்று தக்பீறுகட்டுகிறதில் பறுலானல் பறுலென்றும், அதாவானல் அதாவென்றும், கலாவானல்கலாவென்றும், இமாமத்துச் செய்தால் இமாமன் என்றும், இமாமைத் துடர்ந்தால் மஃமூமுன் என்றும் நியத்துடனே அந்தந்தவக்த்தையுங்கருதி தக்பீறுடனே சொல்லிக்கட்டுகிறது, அதன்பின்னர்வஜ்ஜஹ்தை முஸ்லிமீன்யென்

ன்கிற ஆயத்துக்கரைக்கும் ஓதிப் பின்பு அஊதும் பிஸ்மியும் ஓதி பாத்திஹாவுமோதி ஆமீன்கூறி ஓர் சூறத்தாயினும் மூன்றுயத்தாயினும் முந்தின இரண்டு றக்அத்தில் ஓதி முடித்து அல்லாஹு அக்பர் என்கிற சொல்லுடனே குனிந்து றுக்கூவிற் றரித்தபோது (ஸுபுஹான றப்பியல் அலீம் வபிஹம்திஹி) யென்று 11-விடுத்தமீ அல்லது 3-விடுத்தமாவது சொல்லிப் பிறகு (ஸமி அல்லாஹு லிமன்ஹமிதா) வென்றீ சொல்லுடனே றுக்கூஐவிட்டு முயர்ந்து இஃதிதாலில்வந்து (றப்பனலக்கல் ஹம்து மில்அஸ் ஸமாவாத்தி வமில் அல் அறுலிவமில்அ மாஷிஃத மின்ஷைபின் பஃதஹு) யென்றோதிக் கொண்டு தக்பீறு சொல்லி ஸுஜூதுக்குப் போகவும், அதில் (ஸுபுஹான றப்பியல்அஃலாவபிஹம்திஹி) வென்று 11-விடுத்தம் அல்லது 3-விடுத்தமாவது சொல்லிப் பின்பு (அல்லாஹு அக்பர்) யென்ற சொல்லோடு தலையையெடுத்து நடுவிருப்பில் வந்துஇருந்து (றப்பிக்பிர்லீ வர்ஹம்னீ வஜ்புறுனீ வர்பஃனீ வற் ஸுக்னீ வஹ்தினீ வஆபினீ) யென்று ஓதவும், பின்பு தக்பீறு (அல்லாஹு அக்பற்) என்று சொல்லி இரண்டாம் ஸுஜூதில் போய் முந்தின ஸுஜூதில் சொன்னதுபோல் சொல்லிக்கொண்டு தக்பீறுடனே தலையையெடுத்து எழுந்து நிலையிலாகி இனி மற்றும் றக்ஆத்துக்கெல்லாம் மனதிற்றரித்த நிய்யத்துடனே அவூது முதலான மொழிச்சல்களாலும் நிலைமுதலான சொற்களாலும் றக்ஆத்தை முடிக்கிறதில் ஸுபுஹு தொழுகையில் இரண்டாம் றக்ஆத்தில் இஃதிதால் நிலையில்வரும் அப்ஆலு ஸுன்னத்தாகிய குனூதை நின்று இருகையேந்தி ஓதுகிறது.

## குனூத்து.

அல்லாஹும் மஹ்தினீ பீமன் ஹதைத்த வஆபினீ பீமன் ஆபைத்த வத்தவல்லனீ பீமன் தவல்லைத்த வபாரிக்லீ பீமாஅஃதைத்தவகினீ ஷர்ரமா கலைத்த பஇன்னக்க தக்லீ வலாயுக்லா அலைக்க வஇன்னஹு லாயதில்லு மன்வாலைத்த வலாய இஸ்ஸுமன் ஆதைத்த தபாரக்த்த றப்பனா வத்தஆலைத்த பலகல்ஹம்து அலாமாக்கலைத்த அஸ்தக்பிறுக்க வஅதூபு இலைக்க வஸல்லல்லாஹு அலந்னபிய்யி முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம்.

யென்று ஓதி தக்பீறுடனே ஸுஜூதிற்குபோகிறது. மற்றத் தொழுகையில் இரண்டாம்றக்ஆத்துமுடிவில்வரும் அப்ஆலுஸுன்னத்தாகிய அத்தஹிய்யாத்தை றசூலுல்லாபேரில் சொல்லும் சல

வர்த்துமட்டும் யெல்லாயிருப்பையும்போல் இடதுகால்மேலிருந்து ஓதுகிறதில் (இல்லல்லாஹு) யென்ற சொல் வரும்போது இயல்பாக வலதுகை கலிமா விரலை உயர்த்தலோடும் ஓதியெழுந்து மற்றும் றக்ஆத்துகளை முடித்து முடிவில்வரும் அத்தஹிய்யாத்தை இருப்பில் யிருந்து ஓதுகிறது.

## அத்தஹிய்யாத்து.

அத்தஹிய்யாத்து அல்முபாறகாத்து அஸ்ஸலவாத்து அத்தையிபாத்து லில்லாஹி அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வறஹ்மத்துல்லாஹி வபறகாத்துஹு அஸ்ஸலாமு அலைனாவ அலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹி அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின் (யென்று முந்தின அத்தஹிய்யாத்தில் ஓதவும் பிந்தின அத்தஹிய்யாத்திருப்பில் அதுடனே இதையுஞ்சேர்த்துஓதவும்) வஅலா ஆலிமுஹம்மதின் கமாஸல்லைத்த அலாஇபுறுஹீம வஅலாஆலி இபுறுஹீம் வபாரிக் அலாமுஹம்மதின் கமாபாறக்த்த அலா இபுறுஹீம் வஅலா ஆலிஇபுறுஹீம் இன்னக்கஹமீதுன் மஜீது.

அல்லாஹும் மக்பிர்லீ மாகத்தம்து வமாஅக்கற்து வமாஅஸ்ரர்த்து வமாஅஃலன்து வமாஅஸ்றப்து வமாஅன்த அஃலமுபிஹிமின்னீ அன்தல் முகத்திமு வஅன்தல் முஅக்கிறு லாஇலாஹ இல்லா அந்த ஸுபுஹானக்க இன்னீகுன்து மினல்லாலிமீன்.

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக்க மின்அதாபில் கபுரிவமின் அதாபின்னரீ வமின் பித்னத்தில் மஹ்யா வல்மமாத்தி வமின் பித்துனத்தில் மஸீஹித்தஜ்ஜால்.

அல்லாஹும்ம இன்னீ லலம்த்து நப்ஸீ லுல்மன் கஸீறன் ஃபக்பிர்லீ மக்பிறத்தன் மின்இந்திக்க இன்னக்க அன்தல்கபூருர்ரஹீம்.

யென்று ஓதி முடித்து வலதுபுறத்திலும், இடதுபுறத்திலும் உண்டானமலக்குகளுக்கும்,முஃமினுகியஜின்களுக்கும்முஃமினுகிய மனிதர்களிருந்தால் அவர்களுக்கும் சலாம் சொல்லுகிறேன் யென்றும் ஒரு இமாமை தொடர்ந்தால் அவர் சொல்லும் சலாத்துக்கு பிரத்தியென்றும்கினைத்தலோடு (அஸ்ஸலாமுஅலைக்கும் வறஹ்மத்துல்லாஹி) யென்கிற சொல்லோடு கண்ணைப் புறம்தெரிய இருபுற

மும் திரும்பிப்பார்த்து தொழுகையை நிறைவேற்றி முடித்து நீங்கினதின் பின்னர் இஸ்திக்பாரு ஓதுகிறது.

## இஸ்திக்பாறு.

அஸ்தக் பிருல்லாஹல் அலீம் 3, அல்கரீம் அல்க்திம் அர்ரஹீமல்லதிலாயிலாஹஇல்லல்லாஹு வல்ஹையுல்கையூமின் குல்லிதன்பின் வகத்தீஅத்தின் வஅத்தாபுஇலைஹிவஅஸ்அலுஹுத்தௌபா. அல்லாஹும்ம அன்தஸ்ஸலாம், வமின்கஸ்ஸலாம் வஇலைக்கயர்ஜிஉஸ்ஸலாம் ஹையினா றப்பனா பிஸ்ஸலாம் வஅத்கில்னா பிறஹ்மத்திகதாறஸ்ஸலாம் தபாறக்த்தறப்பனா வதஆலேத்த யாதல் ஜலாலிவல் இக்ரும், லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து பியதிஹில் கைறு வஹுவ அலாகுல்லிஷையின்கதீறு,) யென்று இந்த கலிமாவை 10-விடுத்தமோதி பிறகு (ஹுவல் அவ்வலு வல்ஆகிறு வல்லாஹிறு வல்பாத்தினு வஹு வஸ்ஸமீஉல் பஸீறு, ஹஸ்புனல்லாஹு நிஃமல் வகீலு வநிஃமல் மௌலா வநிஃமன்னஸீறு) (அல்லாஹும்மசல்லிஅலா செய்யிதினா முஹம்மதின் வஅலாஆலிசெய்யிதினா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைஹி வஸல்லிஅலாஜமீயில் அன்பியாயி வல்முர்ஸலீன் வஅலா மலாயிக்கத்தில் முகர்ரபீன் வஅலா இபாதிகஸ்ஸாலிஹீன் வஅலா அஹ்லி தாஅத்திக்க அஜ்மஈன் வற்ஹம்னா மஅஹும் பிறஹ்மத்திக்கயாஅர்ஹமர்றாஹிமீன்) யென்று ஓதிப்பின்பு (இலாஹீ, ஸுபுஹானல்லாஹி) யென்று 33-விடுத்தஞ்சொல்லி (ஸுபுஹானல்லாஹில் அலீம் தாயிமன் அல்ஹம்து லில்லாஹி) யென்று 33-விடுத்தம் ஓதவும். பிறகு அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் ஸப்பித்னா வஅழித்னா அலாதீனில் இஸ்லாமி. (அல்லாஹு அக்பர்) யென்று 33-விடுத்தம் ஓதவும். பிறகு அல்லாஹு அக்பர்கபீறு வல்ஹம்து லில்லாஹி கஸீறன் வஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி புக்றதன் வஅஸீலா லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல்முல்க்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ அலாகுல்லிஷையின் கதீறு, அல்லாஹும்ம லாமானிஅலிமா அஃதைத்த வலாமுஃத்தீ லிமாமனஃத்த வலாறாத்த லிமாகலைத்த வலாமுபத்தில்லிமாஹக்கமன்த வலாயன்பவுதல்ஜத்திமின்கல் ஜத்து பஃலம் அன்னஹு அப்லஹுஸ்ஸிக்ரி (லாயிலாஹ இல்லல்லாஹ்) யென்று 10-விடுத்தஞ்சொல்லுகிறது. பிறகு லாஇலாஹ

இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி ஹக்கன் அலைஹா நஹ்யா வஅலைஹா நமூத்து வஅலைஹா இன்ஷா நப்அது இன்ஷா அல்லாஹு தஆலா.

அல்லாஹும்ம சல்லி வசல்லிம் வபாரிக்அலா செய்யிதினா முஹம்மதின் செய்யிதில் அவ்வலீன் அல்லாஹும்ம சல்லி வசல்லிம் வபாரிக் அலா செய்யிதினா முஹம்மதின் செய்யிதில் ஆகிரீன் அல்லாஹும்மசல்லி வசல்லிம் வபாரிக்அலா செய்யிதினாமுஹம்மதின் செய்யிதில் மூத்தகீன் ஐஸல்லாஹு அன்னபிய்யினா முஹம்மதின் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் பிமாஹுவ அஸ்லுஹு.

அல்லாஹும்மர்ல அன்ஸாதாத்தினா அபீபக்ரினிஸ் ஸித்தீகுத் தகிய்யி வஉமறுல்பாறூகின்னகிய்யி வஉஸமான தின்னூறைனிஸ்ஸகிய்யி வஅலிய்யினில் முறத்தலல் வபிய்யி வஅனிஸ்ஸித்தில்பாகீன் வஅனில்ஹஸனி வல்ஹுசைனி வஅன்ஹம்ஸத்தவல் அப்பாசி வஅனில் முஹாஜிரீன் வல்அன்ஸாரி வஅன்அஸ்ஹாபி றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்.

அல்லாஹும்ம சல்லி அலன்னபிய்யில் முஸ்தபா ஹபீபிக்க முஹம்மதின் அப்திக்க வறசூலிக்கன்னபிய்யில் உம்மிய்யி வஅலா ஆலிஹி வஸஸ்பிஹி வசல்லிம் 10-விடுத்தம் ஓதவும், பிறகு, (வபாரிக் வஸல்லிம் அலைஹிவசல்லி அலாஜமீஇல் அன்பியாயி வல்முர்ஸலீன் வஅலா மலாயிக்கத்திக்கல் முகர்ரபீன் வஅலா இபாதிக்கஸ்ஸாலிஹீன் வஅலா அஸ்லி தாஅத்திக்க அஜ்மஈன் வர்ஹம்னா மஅஹும் பிரஹ்மத்திக்க யாஅர்ஷமர் றுஹிமீன்) யென்றோதி பிறகு பாத்திஹா ஓதி இந்த துவை ஓதவும்.

## துஆ.

அல்லாஹும்ம சல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் லக்கல்ஹம்து யாறப்பி யாமஃபூது யாஅல்லாஹு யாஅல்லாஹு யாறஹ்மானு யாறஹ்மானு யாறஹீமு யாறஹீமு அல்அமான் அல்அமான் மின் ஸவாலில் ஈமான் யாதாயிமல் மஃரூபு யாகதீமுல் இஹ்ஸான் யாஹாதியல் முஸல்லீன் பிஹக்கி இய்யாக்க நஃபுது வஇய்யாக நஸ்தஈன் பிறஹ்மத்திக்க யாஅர்ஹமர் றுஹிமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில்ஆலமீன் யென்று பிறகு பாத்திஹாவும் மூன்று சூறுவும் ஓதி துஆ ஓதுகிறது.

## ஸுபுஹுடைய துஆ.

அல்லாஹும்மசல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின், அல்லாஹும்மஜ் அல் ஸபாஹனா ஹாதா ஸபாஹன் முபாரக்கன் மினல்ஹைரி கரீபன் வஅனிஷ்ஷர்ரி பயீதன் லாகாவியன் வலாகாவிறன் வலாமஹ்றூமன் அல்லாஹும்மஜ் அல் அவ்வல் யௌமினா ஹாதாஸ்ஸலாஹன் வஔஸத்தஹு பலாஹன் வஆகிறஹு நஜாஹன் வறபாஹன் அல்லாஹும்ம ஸப்பிஹ்னா மின்க ஸபாஹர்ரிலா வக்பினா ஷர்ரமாபிக்கலாஷலாதா அஸ்லிப்னா பில்ஜறூயிமி யாக்கரீம் யாறஹீம் அல்லாஹும்மஜ் அல்ஸபாஹனா ஸபாஹஸ்ஸாலிஹீன் வமஸாஅனா மஸா அஸ்ஸாகிரீன். லகுலூ பனா குலூபல் காஷிஈன் வஅப்தானனா அப்தானல் முத்திஈன் வஅஃமாலனா அஃமாலல் முத்தகீன் வஅல்ஸினதனா அல்ஸினதஸ்ஸாக்கிரீன் வனப்பிஹ்னா அன்னௌமத்தில் காபிலீன் வஷகரினா பீ துஆஇஸ்ஸாலிஹீன். வர்ஸுக்னல் ஜன்னத்த யாறப்பல் ஆலமீன் வசல்லல்லாஹு வசல்லம் அலா ஸைய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வசஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## ளுஹருடைய துஆ.

அல்லாஹும்ம சல்லி அலா ஸைய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின், அல்லாஹும்மக்துப்லிகுல்லிவாஹிதின்மின்னா பறூஅதன் மினன்னாரி வஅமானன் மினல் அதாபி வகலாஸன் மினல்ஹிஸாபி வஜவாதன் அலஸ்ஸிறாத்தி வனஸீபன் மினல்ஜன்னத்தி வல்பௌத பில்ஜன்னத்தி வநஜாத்தன் மினன்னாரி அல்லாஹும்ம யாமுகல்லிபல் குலூபி ஸப்பித குலூபனா அலாதீனிக்க வத்தா அத்திக்க வஈமானிக்க யாஅல்லாஹு வஸல்லல்லாஹு அலா செய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜமஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

184390

## அஸருடைய துஆ.

அல்லாஹும்மசல்லி அலா ஸைய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின், அல்லாஹும்மஇன்னாநஸ்அலுக்க ஸலாமத்தன் பித்தீனி வத்துன்யா வஆபியத்தன் பில்ஜஸ்தி வஸியாதத்தன் பில் இல்மி வல்ஹுதா வபறகத்தின் பிர்ரிஸ்கி வஸிஹ்ஹத்தன் பில்அ

க்கீ வதௌபத்தன் கப்லல்மௌத்தி வருஹத்தன் இர்தல்மௌத்தி வமக்பிறத்தன் பஃதல்மௌத்தி யாஸாமிஅ குல்லிசௌத்தின் ஹவ்வின் அலைஹ ஸக்கருத்தில் மௌத்தி, வசல்லல்லாஹு வசல்லம் அலாசெய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## மக்ரிபுடைய துஆ.

அல்லாஹும்ம சல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் அல்லாஹும்ம இன்னா அஸ்அலுக மின்க பிநிஃமத்தின் வஆபியத்தின் வலித்ரின் பஅதிம்ம நிஃமத்தக்க வஆபியத்தக்க வலிதறக்க பித்தீனி வத்துன்யா வல்ஆகிறத்தி இன்னக்க அலா குல்லிஷையின் கதீறு வபில் இஜாபத்தி ஜதீறுன் நிஃமல் மௌலா வனிஃம ன்னஸீறு அல்லாஹும்ம அஜிர்னா மினன்னார் 7-அல்லாஹும்ம அஜிர்னா மினன்னாரில் லாலிமீன் வஅத்கில்னல் ஜன்னத்த பி ஸலாமின் ஆமினீன் வகினா றப்பனா ஷர்ரல்லாலிமீன் வன்ஸுறனா அலல் கௌமில் காபிரீன் இலாஹனா வர்ஸுக்னன்னஹுற இலாலிகாயி வஜ்ஹிகல்கரீம் மஅலிகாயி செய்யிதினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## இஷாவுடைய துஆ.

அல்லாஹும் மஃறபனா பீனுல்மத்தில்லைலி கமா ஹபினுத்தனா யாறப்பனா பீலௌஇன்னஹாரி வஹ்ஷுர்னா மஅல் அப்ருரீ வஜ்அல்முன்கல்பனா இலாதாரில்கறாரீ வனஜ்ஜினா மினன்னரீ வஃபு அன்னல் ஔஷார் யாகப்பார் அல்லாஹும்மஹ்பனா யாபையானு மின்ஜமீஇல்பலாயா வல்அஃதாயி வல்அம்றுல் பிறஹ்மத்திக்க யாஅர்ஹமர் ராஹிமீன் வஸல்லல்லாஹு அலா செய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி வசல்லம் அஜமஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

என்று ஓதுகிற இந்ததுஆக்களுடனே நாடிய நற்கருமங்களுக்கெல்லாமற்றுந் துஆக்களைச் சேர்த்துக்கொண்டு ஓதலாம்.

இங்ஙனம் வகுத்த ஐந்தொகுத்து துஆக்களில் ஒரு இமாம் தமக்குந் தம்மைத் தொடர்ந்து தொழுதவர்களுக்கு மாகவேண்டி ஓதுகிற முறையாக மேற்பாடங்களில் எழுதி யிருந்ததின்படியே வருத்தினது.

## கசறுத் தொழுகையில்.

பதுலாகிய நாலு றக்அத்துத் தொழுகையை கசறுசெய்து இரண்டு றக்அத்தாகத் தொழுவதற்கு இசைந்த ஷறுத்துகளில் 1-வது. சபறுபோகிறவன் தான் நாடிப்போகிற ஊர் பிறப்படுகிற ஊரில் நின்றும் ஹாஷிம் நாற்பத்தெட்டு நாழிகை தூரமிருக்கவேணும். 2-வது போகிறஊரைப் புறப்படுமுதலே குறித்துக்கொள்ள வேணும். 3-வது பாவம் ஏற்படாத சபறுகப் போகவேணும். 4-வது சபரிடத்தில் நிறப்பமாகத் தொழுகிறவனைத் தொடர்ந்து தொழுகாமலாகவேணும். 5-வது தொழும் இடத்தில் அவ்வல் தக்பீறில் கசறென்று நிய்யத்துவைக்கவேணும். 6-வது நிய்யத்தைப் பேதமாக்குகிறதைவிட்டும்பேணிக்கொள்ளவேணும். 7-வது தொழுது தீருமளவுஞ் சபறு தரிபாடாக இருக்கவேணும்.

## ஜம்உ தொழுகிறவகை.

சபரிடத்தில் ளுஹறையும் அஸ்றையும் ஜம்உசெய்து மக்ரிபையும் இஷாவையும் ஜம்உசெய்து முந்தின வகத்திலாவது பிந்தின வக்திலாவது இரண்டொகுத்துத் தொழுகையை ஒரு வக்தில் தொழுகிறது அதில் முந்தின வகுத்துத் தொழுகையை முற்படத் தொழுகிறது. 2-வது அந்தத் தொழுகை நிறப்பமாகா முதலே பிந்தினவக்த்துத் தொழுகையை ஜம்உ செய்கிறேனென்று நிய்யத்து வைக்கிறவரை. 3-வது பிந்தினதொழுகைக்கு இஹ்றாம் தக்பீறுகட்டி முடிக்கிறவரைக்கும் சபறில் தரிபாடாக இருக்கிறது. 4-வது இரண்டுதொழுகைக்குத் தொடர்பு பற்றிக்கொள்ளுகிறது.

இனி, பிந்தின வக்த்தில் ஜம்உ செய்கிறதற்குச் ஷறுத்துகள் 2. அதில் 1-வது முந்தின தொழுகையின் வக்த்தில் ஒரு றக்அத்துத்தொழ காணுமென்று நேரமிருக்கும் வரையில் பிந்தின வக்த்தில் இந்தத் தொழுகையை ஜம்உசெய்துக் கொள்ளுகிறதாக நிய்யத்துச்செய்து கொள்ளுகிறது. 2-வது இரண்டாந்தொழுகை தொழுதுதீருமளவும் சபரில் தரிபாடாக இருக்கிறது. ஆகையால் சபறிளருக்குக் கஸறும் ஜம்உம் தொழஆகும். சபறுளியல்லாத ஏற்பாடான உதுறுளருக்கு ஜம்உமாத்திரந் தொழஆகும்.

## சபறு தரிபாடாதலும் நீங்கலும்.

ஒருவன் தானிருந்து எழுந்தவூர் எல்கையைக் கழித்ததின் பின்னாலே சபறு தரிபாடாயிற்று.

மீண்டு தன்னுடைய ஊர் எல்கையில் வந்தாலும் போகும்போது ஒரு ஊரில் தரிபடுகிறதை நியத்துச் செய்தாலும் அல்லது போனநாளும் புறப்படுகிறநாளுந்தான். நாலுநாள் ஒருஊரில் தரிபடுகிறதை நியத்துச் செய்தாலும் சபறு நீங்கிற்று.

இனி தன்னுடையஹாஜத்துக்காகவேண்டி ஒருஊரில் குறைந்த நாளைக்கொண்டு தரிபட்டதில் நிறைவேறுமையால் வேளையடங்கலிலும் நிறைவேறும் என்கிறதைஆதரவுவைத்தால் பதினெட்டுநாள்வரையும் கசறுஜம்உ தொழுவான். இதற்கு தக்பீறு கட்டுகிறது.

## கஸறுக்கு.

உசல்லிபறுலல் லுஹறி கஸறன்
லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்

அசறுக்கும் இஷாவுக்கும் இதுபோலே அந்தந்த வக்த்தைச் சொல்லிக் கட்டுகிறது.

கஸறுஜம்உ ஆகமுந்தின வக்த்துக்கு
உஸல்லிபறுலல்லுஹறி கஸறன் வஜம்அன்
மஅல் அசுரில்லாஹி அல்லாஹு அக்பர்.

பிந்தின வக்த்துக்கும் மற்ற இரண்டு வக்துக்கும் அந்தந்த வக்ததைச் சொல்லிக் கட்டுகிறது.

## ஜும்ஆத் தொழுகையில்.

ஜும்ஆத் தொழுகை நிரப்பமாகிறதற்கு உரிய ஷறுத்துகள் 6. 1-வது பாலிகாய் ஆகிலாய் முதலிமாய்நாட்டார்மகனாய்செவிடில்லாதவனாய் ஜும்ஆத் தொழுகிற ஊறிலுள்ள ஆண்பிள்ளைகளாக 40-பெயர் கூடவேணும். 2-வது குத்பா ஓதுகிறதும் தொழுகிறதும் அந்தஊர் எல்கைக்குள் ளாகவேணும். 3-வது ஓதலும் வணக்கமும்லுஹறு வகத்திலாகவேணும். 4-வது இரண்டு குத்பா ஓத்வேணும். 5-வது குத்பாக்கள் ஓதித் தீர்ந்ததின் பின்னாலே தொழுகவேணும். 6-வது ஜமா அத்துடனே முந்தின றக்அத்தில் தொழுகிறதுமாம்.

இந்தத் தொழுகைக்கு 40-பெயர் வேணுமென்று முறை கொண்டமையால் இவர்களுக்குப் பின்னாலே எண்ணப்படாதார் தக்பீறு கட்டவேணும்.

குத்துபாவில் பறுலந்து. 1-வது அவ்வலிலே அல்ஹம்து லில்லாஹி என்று அல்லாஹு தஆலாவைப் புகழுகிறதும், 2-வது சில்லல்லாஹு அலா முஹம்மதின் என்று சலவாத்துச் சொல்லுகிறதும், 3-வது வசியத்துச் சொல்லுகிறதும் பறுலாகிய இந்த மூன்று மொழிகளும் இரண்டு குத்துபாவிலு மொழிகிற பறுலுகளாம். 4-வது இரண்டாவொரு குத்துபாவில் ஒரு ஆயத்து ஓதுகிறதும். 5-வது பிந்தின குத்பாவில் முஃமின்களுக்கு ஆகிறத்தைக்கொண்டு துஆ கேட்கிறதுமாம்.

இனி குத்பாவுக்கு ஷறுத்துகள் 7. 1-வது கத்தீபு பெருநதுக்கு சிறுதுடக்கு இரண்டினையும் நீக்கிக்கொள்ளுகிறதும், 2-வது அபத்தை மறையவைத்துக் கொள்ளுகிறதும், 3-வது சக்தியுள்ளவரானால் நிலையில்நின்று ஓதுகிறதும், 4-வது அறபுபாஷையில் ஓதுகிறதும், 5-வது இரண்டு குத்பாவுக்கிடையிலே சற்றே தரிபட்டிருக்கிறதும், 6-வது குத்பாவின் பறுலுகள் யெல்லாம் நிறைவேற அந்த நாற்பது பெயரையுங் கேட்டுக்கொண்டிருக்கிறதும், 7-வது இரண்டு குத்பாவுக்கும் அதன்பறுலுக்கும் தாமதியாது தொடர்பு பற்றிக்கொள்ளுகிறதுமாம். இதற்கு (தக்பீறு கட்டுகிறது.)

உசல்லி பறுலல் ஜும்அத்தி றக்அத்தைனி
லில்லாஹி மஃமூவன் அல்லாஹு அக்பர்

## திலாவத்து சஜதா.

குறுஆன் ஓதுகிறபோது சஜதாவந்தால்
அஸ்ஜுது சஜத்துத்திலாவத்தி
குறுஆனி லில்லாஹி அல்லாஹு அக்பர்

என்று தக்பீறுகட்டி சுஜூதிற் கிடக்கிறபோதும் தொழுகை நிலையில் ஓதுகிறபோது சஜதாவந்தால் அந்தநிலையைவிட்டு சுஜூதிலா யிருக்கிறபோதும் இதை ஓதவும்.

அல்லாஹும்ம வலக்க சஜத்து வபிக்க ஆமன்து வலக்க அஸ்லம்து அன்த றப்பீ சஜத்த வஜ்ஹியலில்லதீ கலகஹு வசவ்வ

றஹு வசக்கசம்அுஹு வீபசறஹு பிஹெளவீஹிவகுவ்வத்திஹி பத்தபாற்க்கல்லாஹு அஹுசனுல்காலிகீன் அல்லாஹு றப்பில் ஆலமீன்.

## நோன்புவைக்கிறதில் பறுலு 2.

1-வது நிய்யத்து வைக்கிறது. 2-வது முறிச்சலாகிற கரியங்களைவிட்டு நீங்கிக்கொள்ளுகிறதுமாம். இனி இதைச்சார்ந்தஷறுத்து 2. 1-வது இந்த நோன்பை வைக்கிறேனென்று நிய்யத்துக்கொள்ளுகிறது. 2-வது பறுலான நோன்புக்கு அந்தந்த இராவையில் நிய்யத்து வைத்தலுமாம்.

## நோன்பு முறிச்சல்.

நிய்யத்தை மறந்தாலும் யாதொரு வஸ்துவைத் தின்றாலும் குடித்தாலும் துவாரங்களில் யாதொருவஸ்துவைப் புகுத்தினலும் சேர்க்கைசெய்தாலும் விந்தைவெளிப்படுத்தினுலும் சத்தியை வருத்தினுலும் புத்திமாறினுலுங் குபிர் நிலைப்பட்டாலும் இதுவல்லாது பெண்களுக்கு ஹைலானுலும் பிள்ளைப்பேறுனுலும் இரத்தத்திரளை மாங்கிஷத்திரளை விழுந்தாலும் முறிதலாயிற்று.

## நோன்புக்கு நிய்யத்துச் சொல்லுகிறது.

நவைத்து ஸெளமகத்தின் அன் அதாயி பறுலு, றமலானி ஹாதிஹிஸ்ஸனதி லில்லாஹி தஆலா. இந்தவருஷத்து றமலான் மாசத்தில் பறுலான நோன்பை அதாவாக நாளைப்பிடிக்க நிய்யத்துச் செய்கிறேன் அல்லாவுக்காக அல்லாஹு லாயிலாஹ இல்லாஹு வல்ஹைறயுல் கையும் அல்காயிமு அலாக்குல்லி நபுசின் பிமாகஸ்பத்.

## நோன்புதிறந்து ஓதுகிற துஆ.

அல்லாஹும்ம லக்கஸும்து வஅலாரிஸ்கிக்க அப்தற்த ஹபல்லமாவு வப்தல்லதில் உறாகு வதபதல் அஜ்று இன்ஷா அல்லாஹு தஆலா.

## தருவீஹு விபரம்.

தக்பீறுகட்ட முதலே முஅஸ்ஸின் (அஸ்ஸலாத்து ஜாமிஅத்தன் றஹிமகுமுல்லா) யென்று சொன்னல் மற்றும் ஜனங்கள் அல்லாஹும்மசல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்று சொல்லியபின் தொழுகையில் துடங்குவார்கள்.

## தருவீஹாத் தொழுகைத் தக்பீறு:

உஸல்லி ஸலாத்தத் தருவீஹா றக்அத்னைனி
லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்

## முந்திலு ஸலாமுக்குப் பிறகு.

ஸல்லல்லாஹு அலைக்க யாறசூறுல்லா அல்லாஹும்ம சல்லி வசல்லிம் அலைஹியென்று சொல்லுவார்கள். 2-வது ஸலாமுக்குப் பிறகு முஅஸ்ஸின் (ஸல்லு அவன்னபிய்யில் முஸ்தபா முஹம்மதின் வஆலிஹி) யென்று சொல்லுவார். ஜனங்கள் அல்லாஹும்ம சல்லி அலா செய்யிதினு முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் அமீறுல் முஃமுனீன் செய்யிதினு அபூபக்கரி னிஸ்ஸித்தீகு றலியல்லாஹு தஆலா அன்ஹு ஸல்லல்லாஹு அலைக்க யாறசூலுல்லாஹி அல்லாஹும்ம சல்லி வஸல்லிம் அலைஹி லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹியென்றும் மற்ற ஒவ்வொரு சலாம் தொழுத முடிவில் ஒன்றிற்கு கலிமாவும் ஒன்றிற்கு சலவாத்தும் அத்துடன் நாலுயார்களின் நாமத்தில் ஒவ்வொரு நாமமுமாகச் சேர்த்து ஓதவும்.

## நாமங்களாவது.

அமீறுல் முஃமினீன் அபூபக்கரி னிஸ்ஸித்தீகென்றும்
அமீறுல் முஃமினீன் உமறிபுனுல் கத்தாபென்றும்
அமீறுல் முஃமினீன் உதுமானிபுனு அப்பானென்றும்
அமீறுல் முஃமினீன் அலிய்யிபுனு அபீத்தாலிபென்றும்

அங்ஙனமதன் முறைபோலே ஒன்பது சலாமுடிவிலுஞ் சொல்லிக் கொள்ளுகிறது. பத்தாம் சலாமுடிவில் சுபுஹானல்லாக் கலிமாவை மூன்றுவிடுத்தம் ஓதுகிறது. இது ஒரு இமாமைத் தொடர்ந்து தொழுதாலும் அவர்சொல்லுஞ் சலவாத்துக்குப் பிரத்திபோலாகவும் மற்றவர்களுஞ் சொல்லுகிறது.

(இனி-பதினுரு மிரவுமுதலாக சலவாத்துடனே) அல்லாஹும்ம இன்னக்க அபுவ்வுன் துஹிப்புல் அபுவ்வ பஃபு அன்னு யாகரீம் யாரஹீம் யாஅல்லா பலூலுன் மினல்லாஹி வநிஃமா, ஊமக்பிறத்தன் வறஹ்மா வஆபியத்தன் வசலாமா வநஸ்தக்பிறுல்லாஹ வநஸ் அலுக்கல் ஜன்னத்த வனஊது பிக்க மினன்னர் என்று இந்த துஆவையு மோதிக்கொள்ளுகிறது.

இதில் கலிமாவும் சலவாத்துஞ் சொல்லுகிறது வழக்கத்தாலென்றறிக.

## வித்றுக்குத் தக்பீறு.

உசல்லி சலாத்தல் வித்ரி றக்அத்தைனி
லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்

என்று தக்பீறுகட்டி முந்தின றக்ஆத்தில் பாத்திஹாவும் சப்பிஹிஸ்ம றப்பிக்கவென்கிற சூறத்தும் இரண்டாம் றக்அத்தில் பாத்திஹாவும் குல்யா ஐயுஹல் காபிரூன்வென்கிற சூறத்துமோதித் தொழுத பிறகு அவ்வல் கலிமா சொல்லுகிறது.

உசல்லி சுன்னத்தல் வித்ரி றக்அத்தன்
லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்

என்று தக்பீறுகட்டி பாத்திஹாவும் குல்ஹுவல்லாஹுவும் குல்அஊது பிறப்பில் பலக்கும் குல்அஊது பிறப்பின்னாசும் ஓதி ஒரு றக்அத்துமட்டுந் தொழுகிறதில் இஃத்திதால் நிலையில் பதினாறிரவு முதலாகக் குனூத்தும் அதற்குப் பின்னுள்ள துவாவுமாக ஓதித்தொழுது தீர்ந்தபிறகு (ஸுபுஹானல் மலிக்குல் குத்தூஸ்) என்று மூன்று விடுத்தம் முதனுள் முதல் இது தொழுகிறபோதெல்லாம் சொல்லுகிறது.

இந்த வித்றுத்தொழுகையை எல்லாநாளும் இஷாத்தொழுகைக்குப் பின்னாலே தொழுகிறது சுன்னத்தாம்.

## பெருநாள் தொழுகை,

நோன்புப் பெருநாளைக்கு கட்டுகிற தக்பீறு.

உசல்லி சுன்னத்தல் ஈதில்பித்ரி
றக்அத்தைனி லில்லாஹி அல்லாஹு அக்பர்

ஹஜ்ஜுப் பெருநாளைக்குக் கட்டுகிற தக்பீறு.

உசல்லி சுன்னத்த ஸலாத்தில் ஈதில் அலுஹா
றக்அத்தைனி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

என்று தக்பீறுகட்டி முதல் றக்ஆத்தில் அவ்வல்தக்பீறு அல்லாமல் ஏழுவிடுத்தமும் மற்ற றக்ஆத்தில் ஐந்துவிடுத்தமும் கைவிட்டுவிட்டு தக்பீறும் கட்டுகிறது. ஒவ்வொரு தக்பீறு கட்டினதுக்கிடையில் ஒவ்வொருவிடுத்தமும் சுபுஹானல்லாக்கலிமா ஓதிக்கொ

ண்டு பின்னாலே முதல் றக்அத்தில் (பாத்திஹாவும் இ
என்கிற சூறத்தும் ஓதித் தொழுகிறது. (சப்பிஹிஸ்ம றப்
அஃலாவும் ஹல்ல அத்தாக்க) வென்கிற இந்த இரண்டு சூற
யும் இரண்டாம் றக்ஆத்தில் ஓதவும் ஆமீன்.

மற்றுமுள்ள சுன்னத்தாகிய தொழுகைகளும் அதுஅதற்கு ஓதலாகிய முறைகளும் எழுத்துக்களாலுந் தெரிந்தவர்களாலும் படித்தறிந்துகொள்ள வேண்டுவதாம்.

## மையித்துக்குச் செய்யுமுறை.

மையித்துக்குச்செய்யவேண்டுங்கடனாகி யபறுலுகள் 4. அதில் 1-வது பரிசுத்தமாகத் தண்ணீர்கொண்டு குளிப்பாட்டுகிறது. 2-வது தூய்தாகிய பிடவைகொண்டு கபனிடுகிறது. 3-வது அதற்காகத் தொழுகிறது. 4-வது நிலத்தில் குழிதோண்டி அடக்கஞ்செய்கிறது.

இந்நான்கு பறுலாகிய செயல்களுமன்றி மற்றுஞ் சடங்குகளெல்லாஞ் சுன்னத்துகளாம். மையித்துத் தொழுகைக்குத் தக்பீறு கட்டுகிறது.

உசல்லிபறுல அலாஹாதிஹில் மையித்தி அறுபஅ தக்பீறுத்தின் லில்லாஹி அல்லாஹு அக்பர்; மையித்துத் தொழுகையில் விதியாகிய பறுலுகள் 7. அதில் 1-வது நிய்யத்து வைக்கிறது. 2-வது நாலுவிடுத்தம் கைவிட்டுக் கைவிட்டுத் தக்பீறு கட்டுகிறது. 3-வது சக்தியுள்ளவன் நின்று தொழுகிறது. 4-வது அவ்வல் தக்பீறு கட்டினவுடனே பாத்திஹா ஓதுகிறது. 5-வது இரண்டாந்தக்பீறு கட்டின வுடனே (அல்லாஹும்ம சல்லி அலாமுஹம்மதின்) என்று சலவாத்துச் சொல்லிக்கொண்டு கமாசல்லைத்தவும் பாத்திஹாவும் ஓதுகிறது. 6-வது மூன்றாந் தக்பீறு கட்டினவுடனே அல்லாஹும்மக் பிர்லீ ஹையினா வமய்யிதினா வஷாஹிதினா வகாயிபினா வசகீரினா வகபீரினா வசக்கரினா வஉன்தானா அல்லாஹும்ம மன்அஹ்யைத் தஹு மின்னா பஅஹ்யிஹீ அலல் இஸ்லாமி வமன்த வப்பைத்தஹு மின்னா பத்தவப்பஹு அலல் ஈமான் நாலாந் தக்பீறு கட்டினவுடனே அல்லாஹும்ம லாத்தஹ்ரிம்னா அஜ்றஹு வலாதப்த்தின்னா பஃதஹு வக்பிர்லனா வலஹு என்று ஓதுகிறது சுன்னத்து. 7-வது சலாங்கொடுக்கிறதுமாம்.

இந்நூலிற்போந்தவியல்புகளெல்லாம் இன்னும் மிக்குளவாகை
இங்ஙனஞ் சுருக்கமாக முற்றுவித்தனம்.

---

## தொழுகைடயவு.

### அறபு மாதங்கள்.

| | | |
|---|---|---|
| முஹர்ரம் | ஜமாதுல் அவ்வல் | றமலான் |
| ஸபர் | ஜமாதுல் ஆகிர் | ஷெளவால் |
| றபீஉல் அவ்வல் | றஜபு | துல்கயிதா |
| றபீஉல் ஆகிர் | ஷஃபான் | துல்ஹஜ்ஜு |

ஆக மாதம் 12-ம் சரி.

### வாரங்கள்.

| (அறபுவாரம்) | (தமிழ்வாரம்) |
|---|---|
| யெளமல் அஹ்து | ஞாயிறு |
| யெளமல் இஸ்னைன் | திங்கள் |
| யெளமல் ஸலாஸா | செவ்வாய் |
| யெளமல் அற்பஃ | புதன் |
| யெளமல் கமீஸ் | வியாழம் |
| யெளமல் ஜும்ஆ | வெள்ளி |
| யெளமல் ஸப்த்தி | சனி |

ஆக நாள் 7-ம் சரி.

### அறபு லக்கம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துமுனு | அரைக்கால் | திஸ்ஆ | 9 | இஹ்தசித்தீன் | 61 |
| றுபுஉ | கால் | அஷறு | 10 | சபயீன் | 70 |
| நிசுபு | அரை | இஹ்தஅஷறு | 11 | இஹ்தசப்யீன் | 71 |
| மூர்றுபுஃ | முக்கால் | இஷ்ரீன் | 20 | தமானீன் | 80 |
| வாஹிது | 1 | இஹ்தஇஷ்ரீன் | 21 | இஹ்தஸமானீன் | 81 |
| இஸ்னு | 2 | தலாதீன் | 30 | திஸ்யீன் | 90 |
| ஸலாஸா | 3 | இஹ்தலாதீன் | 31 | இஹ்ததிஸ்ஈன் | 91 |
| அர்பஅ | 4 | அற்பஈன் | 40 | மிஅத்த | 000 |
| கம்சா | 5 | இஹ்தஅற்பஈன் | 41 | மிஅதைனி | 020 |
| சித்தா | 6 | கம்சீன் | 50 | அலபு | 1001 |
| ஸப்ஆ | 7 | இஹ்தகம்சீன் | 51 | | |
| தமானியா | 8 | சித்தீன | 60 | | |

இத்தேசங்களில் அறபுபாஷை பெரும்பான்மையும் வழங்காதால் சிலதெடுத்து கூறலாயினன்.

தொழுகையடவு முற்றிற்று.